# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.413/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குணசேகரன் | த-பெ | மாரியப்பன் |
| ஊர்: | : | திண்டுக்கல் | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் துணை கண்காணிப்பாளர், DCRB, நாகப்பட்டினம் | மாவட்டம் | திண்டுக்கல் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.06.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் திண்டுக்கல்லில் வசித்து காவல் துணை கண்காணிப்பாளர், DCRB ஆக பணி செய்து வருகிறேன். 15.08.2015 அன்று 10.15 மணிக்கு நிலைய பணியில் இருந்த போது குற்ற எண்.215/2015 இதச பிரிவுகள் 294(b), 323, & 4 of TNPHW Act ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**. பின்னர் விசாரணையை மேற்கொண்ட நான் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவயிடம் சென்று சாட்சிகள் போஸ் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர்ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பார்வை மகஜர் அ.சா.ஆ.5**.

பின்னர் இந்த வழக்கின் எதிரிகளை தேடி சென்ற நிலையில் 1ம் எதிரி நித்யா என்பவரை 15.08.2015 அன்று 13.30 மணிக்கு அவரது வீட்டில் வைத்து வழக்கின் காரணம் கூறி கைது செய்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இந்த வழக்கின் மற்றொரு எதிரியான கார்த்திக் என்பவரை தேடி சென்றநிலையில் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமீன் பெற்றுவிட்ட காரணத்தால் அவரை கைது செய்ய முடியவில்லை. பின்னர் எனக்கு சிறப்பு பணி காரணமாக பணி மாறுதல் சென்றுவிட்ட காரணத்தால் ஆய்வாளர் திரு.ஜெயசீலன் என்பவர் வசம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். இந்த வழக்கின் ஆய்வாளர் ஜெயசீலன் இறந்துவிட்ட காரணத்தால் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை இன்றி அவருடைய விசாரணை குறித்து நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி காவல் ஆய்வாளர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த

மருத்துவர் திரு. அறிவழகன் அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்றுள்ளார். மேற்படி பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்தபோது என்னிடம் சொன்ன விபரங்களை அவரிடம் சொன்னதால் அவர் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மேற்படி ஆய்வாளர் விசாரணையை நிறைவு செய்து 14.09.2015 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கின் புகார்தாரர் எத்தனை மணிக்கு புகார் அளித்தார் என்றால் 10.15 மணிக்கு புகார் அளித்தார். வழக்கு குறித்து எத்தனை மணிக்கு விசாரணை ஆரம்பித்தேன் என்றால் 10.45 மணிக்கு விசாரணை செய்தேன். பட்டியல் சாட்சிகளை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் 1 வது சாட்சியை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தேன். பிற சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தேன். பட்டியல் சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்பதை என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் முன்விரோதம் இருந்ததை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் புகார்தாரர் முன் விரோதத்தின் காரணமாக கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.05 11:14:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.